**சார்பு நீதிமன்றம், துறையூர்.**

**முன்னிலை.திரு.C.விஜய்கார்த்திக்,M.A.,M.L.,**
**சார்பு நீதிபதி,**
**துறையூர்.**

**OS.No.99/2024**

தேதி: 09.10.2025

பெயர் : மதுரைவீரன் (வா.சா.1) த/பெ: சுந்தரம்

**2ம் பிரதிவாதி தரப்பு குறுக்குவிசாரணை**

1. நான் துறையூரில் சௌடாம்பிகை அம்மன் தெருவில் குடியிருக்கிறேன். ஜவுளி தொழில் செய்கிறேன். நான் யாரிடம் கடன் கொடுத்ததாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் ராஜேந்திரன், தனம் ஆகியோகளுக்கு கடன் கொடுத்ததாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன். அவர்கள் ஜெயங்கொண்டான் அருகில் ராசீபுரம் கிராமத்தில் குடியிருக்கிறார்கள். அவர்கள் விவசாயம் தொழில் செய்கிறார்கள். அவர்கள் எனக்கு தெரிந்தவர்களா என்றால் இல்லை, உறவுக்காரர்களா என்றாலும் இல்லை. பிரதிவாதிகள் எந்த வகையில் என்னிடம் கடன் கேட்டார்கள் என்றால் அவர்கள் ஊரில் அண்ணாதுரை என்ற என் நண்பர் உள்ளார், அவர்மூலம் கடன் கேட்டார்கள். அண்ணாதுரை எனக்கு எப்படி தெரியும் என்றால் தரி வேலை செய்யும்போது தெரியும். கடன் எந்த தேதியில் வாங்கினார்கள் என்றால் 15.03.2022ம் தேதி அன்று கடன் வாங்கினார்கள். நான் கொடுக்கல் வாங்கல் தொழில் செய்கிறேனா என்றால் இல்லை. எவ்வளவு தொகை கடன் கொடுத்தேன் என்றால் ரூ.4,00,000/- கொடுத்தேன். அதற்கு வட்டி ரூ.1.50 ஆகும். 15.03.2022 காலம் கொரோனா தொற்று இருந்த காலம் என்பதால் எவ்வாறு ரூ.4,00,000/- தொகை வைத்திருந்தேன் என்றால் நாங்கள் ஜவுளி தொழில் செய்வதால் எப்போதும் கையில் பணம் வைத்திருப்போம். கடன் தொகை என்ன காரணத்திற்கு வாங்கினார் என்றால் குடும்ப செலவுக்காக வாங்கினார். பலமுறை கடன் திருப்பி கேட்டதாக கூறியுள்ளேன், எங்கு சென்று கேட்டேன் என்றால் அவரது ஊருக்கு சென்று கேட்டேன். நான் கடன் என்ன தொகைகளாக கொடுத்தேன் என்றால் ரூ.500/- நோட்டுகளாக கொடுத்தேன். தொகை ரூ.4,00,000/- த்தை கொடுத்ததற்கு வரவு செலவு நோட்டுகளில் எழுதியுள்ளேனா என்றால் இல்லை, கைமாற்று கடனாக கேட்டதால் எழுதவில்லை. ரூ.500/- நோட்டுகளாக எத்தனை கட்டுகள் கொடுத்தேன் என்றால் 8 கட்டுகள் கொடுத்தேன்.

2. அண்ணாதுரையிடம் படிப்பறிவில்லாத பிரதிவாதிகள் அவர்களுடைய உயில் மற்றும் கிரைய ஆவணத்தை படித்துக்காட்ட கொடுத்து அதை அவர் எடுத்து வந்து என்னிடம் கொடுத்து அண்ணாதுரையும் நானும் சேர்ந்து பிரதிவாதிகளிடம் துர்லாபம் அடைவதற்காக தாவா கடனுறுதி சீட்டை தயார் செய்து பிரதிவாதிகள் மீது இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் கூலி வேலைக்கு செல்வதால் அவர்களுக்கும், எனக்கும் நேரடி தொடர்பு கிடையாது என்றால் சரியல்ல. நான் கூறுவது பொய் எனவும், பிரதிவாதிகள் கடன் வாங்க வேண்டிய அவசியம் இல்லை எனவும், அவர்கள் கூலி வேலை செய்வதால் அவர்களுக்கு அரசாங்கத்தில் பண உதவிகள் கிடைக்கிறது என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் என்னிடம் கடன் வாங்கவில்லை எனவும், இந்த வழக்கு தள்ளுபடியாக வேண்டும் என்றால் சரியல்ல. புரோநோட்டில் சாட்சி கையெழுத்து போட்டுள்ளார்களா என்றால் பிரகாஷ், சரவணன் சாட்சி கையெழுத்து போட்டுள்ளார்கள். முதலில் யார் போட்டார் என ஞாபகம் இல்லை. புரோநோட்டு பிரதிவாதிகளால் எழுதப்படவில்லை என்றால் சரிதான். புரோநோட்டை தங்கராஜ் என்பவர் எழுதினார். அவர் என் கடையில் கணக்கு பிள்ளையாக வேலை செய்கிறார். பிரதிவாதிகள் சில்லறை கடனை அடைப்பதற்காக கடன் வாங்கியதாக புரோநோட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். புரோநோட்டில் குடும்ப செலவுக்காக கடன் வாங்கியதாக இல்லை என்றால் சரிதான். என் கடையில் உள்ள கணக்குபிள்ளையை வைத்து என் நண்பர் அண்ணாதுரையை வைத்துக்கொண்டு கூலி வேலை செய்யும் பிரதிவாதிகள் மீது பொய்யாக புரோநோட்டு தயார் செய்து வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கு தள்ளுபடியாக வேண்டும் என்றால் சரியல்ல.

/ உண்மை நகல்/

(ஓம்/-C.விஜய்கார்த்திக்)
சார்பு நீதிபதி,
துறையூர்.